**மார்ச் – 28**

**"நீயும் யேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி." - 2தீமோ 2 : 3.**

உண்மையான போர்ச் சேவகன் தன்னுடைய விசுவாசத்தைக் குறித்து விவாதிக்கிறதில்லை. அதற்கு ஊழியம் செய்யத் தன் பெயரைப் பதிவு செய்வதற்கு முன்பே, அதன் நியாயத்திலும், நீதியிலும் ஸ்திரப்பட்டிருக்கிறவனாக நியாயப்படி எண்ணப்படுகிறான். அதற்குப் பிறகு அதை ஆதரித்துரைக்கிறான். மேலும், யாராவது அதைக் குறித்து எதிராகப் பேசினால், அதை எதிர்க்கிறான். அதன் தற்காப்பில் எல்லாவற்றையும் செலவு செய்யவும், எல்லாம் செலவு செய்யப்படவும் அவன் தயாராக இருக்கிறான். உண்மையிலும், நேர்மையிலும் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வது மகிமையுள்ளதாயிருக்கிறது. தான் சரியான பக்கத்திலிருப்பதிலும், இரத்த நிலத்திற்கும் இருளின் பள்ளத்தாக்குக்கும் அப்பால் வெற்றி சூடிய ராஜாதி ராஜாவின் சந்தோஷத்திற்குள்ளும், சமாதானத்திற்குள்ளும் தனக்கு ஒரு பரிபூரண பிரவேசம் இருக்கிறது என்று அறிகிறதிலும் சொல்ல முடியாத ஒரு சந்தோஷம் இருக்கிறது. அந்த நம்பிக்கைக்காக, யுத்தத்தின் கடுமையிலிருந்து ஒருவரும் பின் வாங்கக் கூடாது. விரோதியின் உக்கிரத்திற்கு முன்பாக ஒருவரும் சோர்வடையக் கூடாது. பசி, தாகம், நிர்வாணம், காயங்கள் அல்லது மரணம் இவைகளின் நிச்சயத்திற்கு முன் ஒருவரும் நடுங்கக் கூடாது. **- Z '03, 84 (R 3162).**

யேசு தளக் கர்த்தராயிருக்கிற அந்த சேனையில் கர்த்தருடைய ஜனங்கள் போர்ச் சேவகர்களாக இருக்கிறார்கள். அநேகக் கஷ்டங்களில் அடிபட இருப்பதினால், அவர்களுடைய போராட்டத்திற்குத் திடமான சகிப்புத்தன்மை வேண்டியிருக்கிறது. அவர்களுடைய அநேகத் துன்பங்களின், வறுமையின் மத்தியில், சுய வெறுப்பில் விடா முயற்சி செய்ய வேண்டும். அவர்களுடைய அநேகக் குறைகள் கிட்டத்தட்ட மூர்ச்சையடைகிற அளவிற்கு அவர்களுடைய சகிப்புத்தன்மையைப் பாரமாக்குகிறது. அவர்களுடைய குற்றங்கள் அதைரியத்திற்கு எதிராக சகிப்புத் தன்மையைக் கேட்கிறது. மேலும், அவர்களுடைய சோதனைகள், கஷ்டங்கள் இவைகளின் கடுமையை கஷ்டத்துக்குப் பழக்கப்பட்டதும், கர்த்தரால் ஆதரிக்கப்பட்டதுமான ஒரு ஆவியினால்தான் சகிக்கக் கூடும். **-P '35, 32.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எபி 2:10; ஏசா 59:16,17; 54:17; எபே 6:10-17; ரோம 13:12; 2கொரி 6:7;10:4,5; 1தெச 5:8; 1தீமோ 6:12; 2தீமோ 4:7; 1கொரி 16:13; 1பேது 5:8,9; பிலி 1:27; 4:1; யோசு 1:6,7; தானி 11:32.

**கோபுர வாசிப்பு : Z '14, 54(R 5403)**

**வினாக்கள் :** இந்த வாரத்தின் கிறிஸ்தவப் போர் முறையில் நான் எதைச் சகித்தேன்? எப்படி? ஏன்? அதில் உதவியாக இருந்தது எது? இடையூறாக இருந்தது எது? பலாபலன் என்ன?